# சுற்றுச் சூழலியல் நோக்கில் மு.இராமசாமியின் வியாபாராமாயணம் நாடகம்

முனைவர்.கோ.சாந்தி
உதவிப்பேராசிரியர்,பாத்திமா கல்லூரி(தன்னாட்சி), மதுரை- 18.

35

**ஆய்வுச் சுருக்கம்**

சுற்றுச் சூழலியல் என்பது மனிதர்கள் இயற்கையுடன் கொண்ட உறவினை பேதப்படுத்தும் ஒரு செயலாகக் கருதப்படுகிறது. தன்னைக் காக்கும் இயற்கையின் மீது மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் வகையில் தொழிற்சாலைகளைப் பெருக்குவது, கரியமில வாயுவின் அளவுக் கூடுவதற்கு வகை செய்வது. மண்ணின் தன்மையை இழக்கச் செய்யும் வகையில் உரங்களைப் பயன்படுத்துவது. மலடான மண்ணை மனைகளாக்கி வியாபாரம் செய்வது என்று சந்தைப்படுத்தும் நோக்கிலான செயல்பாடுகள் சூழலைக் கேடுறச் செய்கின்றன. மு.இராமசாமியின் நாடகமான வியாபாராமாயணம் என்பது வியாபாரம் செய்வதற்காக என்னென்ன தந்திர உத்திகளை மேற்கொண்டு மக்களை முட்டாளாக்குகிறார்கள் என்று பகடியுடன் கூறுவதாக அமைகிறது. பிள்ளையார் துதியில் ஆரம்பிக்கும் இந்த நாடகம் பிள்ளையாரை கேள்விக்குட்படுத்துவதிலிருந்தே தொடங்குகிறது. நாத்திகம் பேசுதல், வியாபாரம் பற்றி பேசுதல், வியாபாரத்தின் வரலாற்றைப் பேசுதல், முதலாளித்துவம் அனைத்தையும் சரக்காகவே கையாளும் என்பதைக் கூறுதல், காதல், அன்பு, பண்பாடு எனப் பலவற்றையும் சரக்காக்கி வியாபாரம் செய்கிறது. அதன் மூலம், மண், மனம், பண்பாடு, உணவு ஆகியனவற்றை சீர்கேடடைய செய்கிறது என்பதை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

**குறிப்புச் சொற்கள் :** சுற்றுச் சூழல், நெழிகி அரிசி, நாடகாமாயணம், கிழக்கிந்திய கம்பெனி, சரக்கு. மண் மலடு, காதல், உணவு, உடை

**முன்னுரை**

கடந்த நாற்பது ஆண்டுகளாக மக்களிடம் சுற்றுச் சூழல் பற்றிய விழிப்புணர்வு சார்ந்த சிந்தனைகள் மேலோங்கியுள்ளன. பனிப்பாறை உருகும் வேகம் அதிகரித்திருப்பதையும், இதனால் பல தீவுகள் தண்ணீருக்குள் மூழ்கும் அபாயம் ஏற்பட்டிருப்பதையும் கண்கூடாகக் காணமுடிகிறது. சுற்றுச் சூழல் கேட்டிற்கு அடிப்படைக் காரணியாக செயற்கை வாழ்வின் அதீத நுகர்வு அமைகிறது. தொழிற்சாலைகள், போக்குவரத்துகள் ஆகியனவற்றால் காற்று மாசுபாடு அதிகரித்துக் கொண்டே வருகின்றது. மேலும் பருவநிலை மாறுபாடுகளால் முறையாக மழை பெய்வதும், வெப்ப நிலையும் இருப்பதில்லை. அதில் ஏற்படும் மாறுபாடுகள் மனிதர்களிடம் பல்வேறு சிக்கல்களை ஏற்படுத்துகின்றன. ஓசோன் படலத்தின் துளையால் வெப்பம் மிகுதியாக இருப்பதாகக் கூறப்படுகிறது. கரியமில வாயு மிகுதியாக காற்றில் கலப்பதால் சுவாசிக்கும் காற்றின் தரமும் குறைந்து வருவதாகக் கூறப்படுகிறது. இத்தனை இன்னல்களையும் இந்தத் தலைமுறையினர் சந்திக்கின்றனர் என்பது பெரும் துயரம் ஆகும். உணவு முறைகளில் மாற்றங்கள், வேளாண்மையில் மாற்றங்கள், விரைவான விளைச்சலுக்காக செய்யப்படும் செயற்கை உரங்கள், மருந்துகள் ஆகியன உணவை விசமாக்குகின்றன என்று கூறப்படுகிறது. விளைவாக குறுக்கு வழியில் உணவைத் தயாரிக்கும் மனப்பான்மை வளர்ந்து வருவதாகவும் சைனாவில் நெகிழி அரிசி உற்பத்தி செய்யப்பட்டு விற்கப்படுவதாகவும் கூறப்படுகிறது. நெகிழி அரிசி என்பது விளைவிக்கப்படுவதில்லை.

தொழிற்சாலையில் உருவாக்கப்படுவது என்று கூறப்படுகிறது. இது உண்மையா வதந்தியா என்பது அறியப்பட முடியாதது ஆகும். ஆனால் முதலாளித்துவம் நிதி மூலதனப் பெருக்கமானது யாவற்றையும் சந்தைப்படுத்தும். சந்தை மனிதனை மிக கொடூரமானவனாக மாற்றுகிறது. இது போன்ற சூழல்களை தம் நாடகமான வியாபாராமாயணம் என்பதில் பாத்திரங்கள் வழி எடுத்துரைக்கிறார் மு.இராமசாமி. இக்கட்டுரை அந்த நாடகத்தை பகுப்பாய்வு செய்வதாக அமைகிறது.

**சுற்றுச் சூழல் கேடு**

மனிதர்கள் சுவாசிக்கும் காற்றில் கரியமில வாயுவின் அளவு அதிகரித்திருப்பதாகவும் நாம் பயன்படுத்தும் ஒவ்வொரு பொருளிலும் நச்சுப் பொருள் கலந்திருப்பதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. கானுயிர்கள் இதனால் அழிவுக்கு உள்ளாகின்றன என்றும் கூறப்படுகிறது. பசுமைப் புரட்சியாக இந்த நச்சுப் பொருள் கூடிய விளைச்சல் வளர்த்தெடுக்கப்பட்டது. “நவீன வேளாண் அறிவியலின் வித்து 19ஆம் நூற்றாண்டின் நவீன் ரசாயனவியலில்தான் முதலில் முளைத்தது” (சங்கீதா ஸ்ரீராம், பசுமைப் புரட்சியின் கதை, ப.84) என்று கூறும் சங்கீதா ஸ்ரீராம். உயிர்ச் சூழல் என்பது அறிவியலால் அளவிட்டுப் பகுத்தாய்ந்துவிடக் கூடிய ஒன்றல்ல என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும் என்கிறார். “நமது உள்ளூர் உயிர்ச் சூழல் அமைப்புக்கு ஒத்துவராத அந்நியத் தாவர வகைகளுடனும் ரகங்களுடனும் கூடவே முன்பு கண்டிராத நோய்களும் பூச்சிகளும் சேர்ந்து அறிமுகமாயின.” (மேலது, ப.93) என்றும் குறிப்பிடுகிறார். நவீன வேளாண்மை கொண்டு வந்த பசுமைப் புரட்சியின் விளைவாக விளைச்சல் பெருகியது என்றாலும் அதன் விளைவுகள் பாரதூரமானவையாக இருக்கின்றன என்கிறார். நவீன வேளாண்மையின் சிறப்பு அதன் உரங்களாகும். அது உருவான வரலாற்றைப் பற்றி “முதலாம் உலகப் போருக்குச் சற்று முன்பாக ஹேபர், பாஷ் என்ற இரு ஜெர்மானியர்கள் வெடிமருந்துகளின் முக்கிய மூலப் பொருளான அம்மோனியாவை (நைட்ரஜன் வாயுவைப் பொருத்தி) உற்பத்தி செய்யும் முறையைக் கண்டறிந்தனர். இது இல்லையென்றால் ஜெர்மனியிடம் போரை நீட்டிப்பதற்கான ஆயுதங்கள் தீர்ந்து போயிருக்குமாம். இந்தத் தொழில்நுட்பம் விரைவிலேயே மற்ற நாடுகளைச் சென்றடைந்தது. உலகெங்கும் அம்மோனியா உற்பத்தி பரவலானது. நாம் சுவாசிக்கும் காற்றிலிருக்கும் அம்மோனியாவைத் தயாரிப்பதற்கான ஆராய்ச்சியை 1930களில் மேற்கொண்டு வெற்றியும் கண்டது அமெரிக்க அரசு. இந்த முறையில் அம்மோனியாவைத் தயாரிக்க அதிகமான அளவில் மின்சாரம் தேவைப்பட்டதால் பெரிய அணைகளுக்கருகே அம்மோனியா உற்பத்தி ஆலைகள் கட்டப்பட்டன. இரண்டாம் உலகப் போர் முடியும் சமயத்தில் பல கோடி டன் அளவில் உலகெங்கிலும் அமோனியா உற்பத்தியாகிக் கொண்டிருந்த போர் ஓய்ந்ததும், ஆலைகளும் ஓய்ந்து நின்றன. இத்தனை முதலீடும் வீணாகாமல் இருக்க என்ன செய்யலாம் என்று அவசர அவசரமாக யோசித்த சிலருக்கு வேளாண் அறிவியல் முன் வைத்த NPK கோட்பாடு நினைவுக்கு வந்தது. அமோனியாவைக் கொண்டு பயிர்களுக்குத் தேவையான உரத்தைத் தயாரித்து உலகெங்கும் விவசாயிகளைத் தங்கள் நிலங்களில் கொண்டு கொட்டச் சொல்லலாமே என்றெண்ணி அதைச் செய்யவும் தொடங்கினர். இன்றுவரையில் உப்பு என்று கிராமங்களில் வழங்கி வரும் கணக்கேயில்லாத டன்களில் மண்ணில் நாம் கொட்டி வைத்துள்ள யூரியா பிறந்த கதை இதுதான்” (மேலது, பக்.106-107) என்ற கூற்றிலிருந்து மண்ணின் வளத்தைப் பெருக்குவதற்காகக் கொட்டப்படும் யூரியா போன்ற உப்புக்கள் வெடிமருந்து தயாரிக்கப்பயன்படும் உப்பு என்பது கண்கூடு. இதனால் நிலங்கள் மலட்டுத் தன்மை அடைந்தன. அவற்றை மேலும் மேலும் வளமாக்க மேலும் ரசாயன உரங்களைப் போட வேண்டியிருந்தது. இந்த

அடிப்படையில்தான் இயற்கைச் சூழல் மீது தாக்குதல் தொடங்கப்பட்டது.

புவி வெப்பமடைதல் பிரச்சினை குறித்து மக்களிடம் போதுமான விழிப்புணர்ச்சி இல்லை என்பது கவலைக்குரிய ஒன்றாக இருக்கிறது. ஆனால் அதனை பொய்யென்று பரப்பும் நிலை இன்று காணப்படுகிறது. “காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழகக் கல்லூரியில் படித்த ஒரு பொறியியல் பட்டதாரி. ஒரு மென்பொருள் நிறுவனத்தை நடத்துவதாகத் தெரிகிறது. இவர்தான் உலகெங்கும் நாசா, ஐக்கிய நாடுகள் சபை போன்ற பல அமைப்புகளில் பணிபுரியும் மற்றும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற சூழலியல் அறிவியலாளர்களின் ஏகோபித்த அவதானிப்பான புவி வெப்பமடைகிறது என்ற கருத்தை வியாபாரிகள் சுய லாபத்திற்காக பரப்பும் கற்பனை என்று ஆதாரப்பூர்வமாக நிரூபித்ததாக தினகரன் கொண்டாடுகிறது… ஏன் இப்படி புவி வெப்பமடையும் பிரச்சினையில் தான் தோன்றித் தனமாக பலரும் பேசுகிறார்கள் என்பது பரிசீலனைக்குரியது.” (ராஜன்குறை, மானுட யத்தனம் என்றால் என்ன?, ப.85-86) என்று புவி வெப்பமாதல் குறித்த பொய்யைப் பரப்பும் பத்தாம்பசலித் தனத்தை எடுத்துரைக்கிறார் ராஜன்குறை. புவியின் வெப்பம் அதிகரிப்பதால் பருவ நிலை மாறுபாடுகள் பல நாடுகளைப் பாதிக்கின்றன. கடல் நீர் மட்டம் உயர்வதால் சில நகரங்கள் அழியும் நிலை கூட ஏற்படலாம். “வளர்ச்சிப் பேரிடர்கள் மனித குலத்துக்கும் பூமியின் இருப்புக்கும் அச்சுறுத்தலாக எழும் சிக்கல். நிலத்தையும் நீரையும் காற்றையும் மனிதன் கையாண்டு வரும் முறையினால் பூமி மெதுவாக அழிந்து கொண்டிருக்கிறது. உடனடியாக பெரும் தாக்கத்தை ஏற்படுத்துவதால் இயற்கைச்சீற்றங்கள் நம் கவனத்தை ஈர்க்கின்றன. வளர்ச்சிப் பேரிடர்களை யாரும் கண்டு கொள்வதில்லை.” (வறீதையா கான்ஸ்தந்தின், கடற்கோள் காலம், ப.32) என்று மனிதர்களின் அலட்சியத்தால் ஏற்படும் பூமியின் அழிவும் படிப்படியாக பூமிக்கு நேரும் பெரும் ஆபத்தும் கண்டுகொள்ளப்படாத நிலை பற்றியும் எடுத்துரைக்கிறார் வறீதையா. பருவநிலை மாற்றம் காரணமாக கடற்கரை சார்ந்த மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளைப் பற்றி “கடந்த பதினைந்து வருடங்களில் 250 சதுர கிலோ மீட்டர் அளவிற்கு இந்தியக் கடற்கரைகளை கடல் கொண்டிருக்கிறது. இதற்கு கடற்கரை சார்ந்த கட்டுமானங்களும் பருவநிலை மாற்றம் காரணமாக ஏற்படும் கடல் நீர்மட்ட உயர்வும் முக்கியக் காரணங்கள்” (கிறிஸ்டோபர் ஆன்றணி, இனயம் துறைமுகம், ப.15) என்ற கூற்றினால் இதனை அறிந்து கொள்ள முடிகிறது.

தொடர்ந்து சூழலுக்கு இழைத்து வரும் கேடுகள் மனிதனை மேலும் மேலும் பாதிப்படைய செய்யும் என்பதை அறியாமல் இல்லை. இருந்தாலும் மக்கள் அதிலிருந்து விழிப்புணர்வு பெறவில்லை என்றே அறிஞர்கள் பலரும் கருத்துரைக்கின்றனர். நிதிமூலதனப் பெருக்கம், நுகர்ச்சி வெறி ஆகியன பற்றி இலக்கியங்களில் எடுத்துரைக்கப்படுகின்றன. முதலாளித்துவ சமூக அமைப்பில் நுகர்வு வெறி என்பது தவிர்க்க முடியாததாக இருக்கிறது. சூழலைக் கேடுறச் செய்வதில் பொருள் உற்பத்தி அதனை விற்பனை செய்தல் ஆகியனவும் முக்கியப் பங்காற்றுகின்றன. முதலாளிகளின் லாப வெறிக்கு மக்கள் பலியாகின்றனர்.

மு.இராமசாமியின் வியாபாராமாயணம்

தமிழில் நவீன நாடகங்களில் முக்கியத்துவம் உடையவராகத் திகழும் மு.இராமசாமியின் நாடகங்கள் முற்போக்குத் தன்மை கொண்டவையாகவும், ஏகாதிபத்திய எதிர்ப்புக் கருத்துக்களை உள்ளடக்கியனவாகவும், சுற்றுச் சூழல், பெண்ணியம், பகுத்தறிவு போன்ற சிந்தனைகளைக் கிளறுவதாகவும் அமைகின்றன. அவருடைய நாடகங்கள் சமூக விமர்சனங்களை முன் வைக்கின்றன.

பெரியாரிய கருத்துக்களை தன் நாடகங்கள் பலவற்றில் எடுத்துரைக்கிறார். பெண்ணியச் சிந்தனைகள், வைதீக மறுப்பு, கடவுள் மறுப்பு என்பனவற்றோடு சுற்றுச் சூழல் சார்ந்தும் நாடகங்கள் இயக்கியுள்ளார். இவருடைய சிறு நாடகங்கள் ரௌத்திரம் பழகு, வியாபாராமாயணம், வலிஅறுப்பு என்பனவாகும். இதில் ரௌத்திரம் பழகு, வலி அறுப்பு ஆகியன பாலினம் சார்ந்த உரிமைகளைக் கோருபவை. வியாபாராமாயணம் நிதி மூலதனத் திரட்சி, மண்ணை மலடாக்கும் வீரிய விதை, உரம், பூச்சிக் கொல்லி மருந்து ஆகியவற்றின் தீமைகளைப் பற்றி எடுத்துரைக்கும் வகையில் பாத்திரங்களை உரையாட விடுகிறார்.

**வியாபாரம் பற்றி நாடகம் போடுவது பற்றி**

வியாபாராமாயணம் என்னும் இந்த நாடகத்தில் விதூசகன்1, விதூசகன்2 என்ற இரண்டு பாத்திரங்கள் இடம்பெறுகின்றனர். இவர்கள் தங்களுக்குள் பேசிக் கொண்டே இருக்கிறார்கள். எதைப் பற்றி நாடகம் போடுவது என்பது பற்றி விவாதிக்கிறார்கள். போனால் போகட்டும் போடா என்னும் கண்ணதாசனின் பாடல் கொண்டு வரும் ஜனனம் என்பது வரவாகும், அதில் மரணம் என்பது செலவாகும் என்று பாடல் படிக்கும் போது வரவு, செலவு கணக்கு பற்றிய பேச்சு வருகிறது. உடனே வியாபாரம் பற்றி நாடகம் போடலாம் என்று விதூசகன் 1 "எனக்கொரு ஐடியா வியாபாரம் பத்தி நாடகம் போட்டா என்ன? விதூசகன் 2 வியாபாரம் பத்தியா, வியாபாரம்னா ஒரு கம்பெனி நடத்தனும்" (ரௌத்திரம் பழகு, ப.28) என்று ஒரு நிறுவனம் தொடங்குவது பற்றி கூறப்படுகிறது. அதை அடியொற்றி உற்பத்தி, சந்தைப்படுத்தல், அதன் நுட்பம் பற்றி விவாதித்து வியாபாரம் செய்வது என்பது பொய்யும் புனைசுருட்டுமாக பொருளை மிகைப்படுத்தி மக்களின் மனதைக் கவர்தல் வேண்டும் என்பதாகக் கூறப்படுகிறது. வியாபாரமே தில்லுமுல்லு என்பதை அடியொற்றியதாக இருப்பதாகவும் வியாபாரியே அதிகாரியாகி, அரசாங்கமாக ஆகி விட்டதாகவும் கூறப்படுகிறது. "வியாபாரி, அதிகாரியா, அதிகாரி அரசாங்கமா மாறுனதுதான் நம்ம வரலாறு, அதுதான் நம்ம நாடகமாயணம், வியாபாரம்தான் நம்ம நாடகமாயணம், இனுமெ நம்ம நாடகந்தான் வியாபாராமாயணம், வியாபாராமாயணம்" (ரௌத்திரம் பழகு, ப.29) என்று கூறுகின்றனர். வியாபாராமாயணம் என்பது வியாபாரம் என்பதே புனைசுருட்டு அல்லது பொய்யால் விளைவது என்று கூறுவதற்காக ராமாயணம் என்ற சொல்லிலிருந்து மாயணம் என்ற பின்னொட்டை இணைத்துக் கொண்டுள்ளார் ஆசிரியர். இதிகாசங்கள் அனைத்தும் புனைவும் புனைசுருட்டும் என்பதால் இப்பெயர் இட்டுள்ளார் எனக் கருதமுடிகிறது. ஆசிரியரான மு.இராமசாமி ஒரு திராவிட இயக்கச் சிந்தனையாளர். பெரியாரின் சிந்தனைகளை மேடை தோறும் வெளிப்படுத்துபவர். அதனால் ராமாயணம் என்பதன் தன்மையை வியாபாரத்திற்கும் அளிக்கிறார் எனக் கருதலாம்.

வியாபார உத்திக்காக அல்லது வியாபாரத்தின் பொருட்டு உற்பத்தியை மிகுவித்தல் என்பது இன்று பெருகியிருக்கிறது என்பதை நாடகத்தின் மூலம் தெளிவிக்கிறார் ஆசிரியர்.

வி.2 : உற்பத்திப் பொருளை நல்ல லாபத்தோட – உபரி வருமானத்தோட – சந்தைப்படுத்துறதுதான் வியாபாரம் ம்ம்ம் சொல்லு

வி.1: உபரி வருமானத்தோட சந்தைப்படுத்துறதுதான் வியாபாரம்…" (ரௌத்திரம் பழகு, ப.30)

என்று உபரி வருமானம், லாபம், மிகுதியான லாபம் என்று பெருகுவதே வியாபாரம் என்று

கூறப்படுகிறது. உணவு, உடை, காதல் என அடிப்படையானவற்றை சந்தைப் பொருள்களாக மாற்றுவதுதான் பன்னாட்டு வியாபார யுக்தியாக இருக்கிறது எனப்படுகிறது. “காதல் என்பது பண்பாடு.. அதைக் கடைச் சரக்காக்கும் வியாபாரம்” (ரௌத்திரம் பழகு, ப.31) என்று இதனைக் குறிப்பிடுகிறார். இவ்வாறு வியாபாரத்தின் பொருட்டு பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதும் புதிய யுக்திகள் மூலம் அரிசி விளைவிக்க முதலாளிகள் முயற்சிப்பதும் அதன் விளைவாக பிளாஸ்டிக் அரிசியைக் கண்டு பிடிப்பதும் அதனைச் சந்தைப்படுத்துவதும் அதனால் ஏற்படும் விளைவுகளைப் பற்றிக் கவலை கொள்ளாதிருப்பதுமென வியாபாரத்தின் நோக்கம் பற்றி எடுத்துரைக்கிறார்.

**சுற்றுச் சூழல் விழிப்புணர்வு**

வியாபாராமாயணம் என்னும் இந்த நாடகத்தில் விதூசகன் 1, 2 ஆகிய இரு பாத்திரங்களை வைத்தே கதை சொல்கிறார். இடையில் இரண்டு நபர்கள் குறிக்கப்படுகின்றனர். அவர்கள் பொது மக்களாக தம் நிலை பற்றிக் கூறுகின்றனர். விவசாயம் பொய்த்துப் போயிற்று என்றும் மழை இல்லை என்றும் காற்றில் ஈரப்பதம் இல்லை என்றும் கூறி உணவுப் பஞ்சம் ஏற்பட்டதை வெளிப்படுத்துகின்றனர். விவசாயம் பொய்த்துப் போனதற்கான காரணத்தை “ஐ.டி காரிடார் உள்ளே நொழாஞ்சாச்சி இனுமெ வெவசாயம் அவுட். ரியல் எஸ்டேட்தான் டாப்.. விவசாயங்கறது புனைவு. ரியல் எஸ்டேட்தான் ரியல். அதுலெதான் காசு” (ரௌத்திரம் பழகு, ப.33) என்று விவசாய நிலங்கள் தொழிற்சாலைகளாக உருமாறுவதும், தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் பெருகி மக்கள் அதை நோக்கிச் சென்று விட்டபடியால் தம் நிலத்தை விற்று மனைகளாக்குகின்றனர் என்று குறிப்பிடுகிறார். மண்ணில் விளையாத நெகிழி அரிசியை இறக்குமதி செய்து அதனை விற்பனை செய்வோம் என்று கூறுவதை “ம்ஹூம் மழை… மானியம்… மின்சாரம் அது இல்லாட்டி என்ன… நெகிழி அரிசியை எறக்குவோம்… நெகிழி அரிசியா.. இதுதான் நம்ம வியாபாரமாயணம் நெகிழிதான் நம்ம வியாபார பாணம்…. அது என்ன நெகிழி அரிசி அதுக்கு மழையே வேண்டாமா? மழையும் வேண்டாம் உரம் போட இலையும் வேண்டாம். கேள்விப்பட்டதேயில்லையே” (ரௌத்திரம் பழகு, ப.35) என்று விளைவிக்கப்படாத நெகிழி அரிசி வியாபாரம் பற்றிக் கூறப்படுகிறது. இதில் உரம் போட இலையும் வேண்டாம் என்று கூறுவதைக் காணலாம். உரம் என்பது ரசாயண உரமாகும். ஆனால் இலை என்று குறிப்பிடுவதால் இயற்கை உரம் என்று கொள்ளலாம். ஆனால் எளிதாக விளையவைக்க இலை மக்கிய உரம் போதாது. நெகிழி அரிசியை விற்பதற்கான தந்திரம் என்பது பற்றிக் கூறும் போது நெகிழிக்கு விளக்கம் கேட்டால் என்ன செய்வது என்பதற்கு பதிலாக “ஐ.ஆர் 8க்கு என்ன வௌக்கம் தெரிஞ்சா சாப்பிட்டுப் பேண்டோம். 24 மணிநேர தாம்பத்ய ஒறவுக்கு இதை விட்டா வேறு வழியே இல்லேம்போம்.” (ரௌத்திரம் பழகு, ப.37) என்று நெகிழி அரிசியை விற்பதற்கானத் தந்திரம் பற்றிக் கூறப்படுகிறது. மேலும் இந்த அரிசியில் பல வித ஊட்டச்சத்துக்கள் உள்ளன என்று விளம்பரப்படுத்த வேண்டும். என்று கூறப்படுகிறது. நெகிழி அரிசி சாப்பிட்டால் உடல் நலத்திற்குக் கேடு நேராது என்று கேட்பதற்கு பருத்தியும் , புண்ணாக்கும் தின்று வளர்ந்த மாடுகள் பிளாஸ்டிக்கைத் தின்னவில்லையா என்று கேட்கின்றனர். பிளாஸ்டிக் என்பது மண்ணுக்குக் கேடு என்பார்களே என்று கேட்பதற்கு “பிளாஸ்டிக் சூப்பர்தான் ஆனா மனச உறுத்துற ஒண்ணு பிளாஸ்டிக்னால நிலத்துக்கு அழிவுங்கறாங்களே… அப்ப அதைச் சமச்சிச் சாப்பிட்டு அதை மனுஷக் கழிவா மாத்தச் சொல்வோம்

நிலத்தை வளமாக்கச் சொல்லுவோம்...” (ரௌத்திரம் பழகு, ப.39) என்றும் “இப்ப நிலம் மலடாகாம இருக்க நிலத்லயே பயிரு பச்சை வைக்காம மழையையே எதிர்பார்க்காம உரம் எதுவும் போடாம ஒரு நேரக் கரெண்ட வச்சே மிஷின்லயே உருவாக்கலாம் நெகழி அரிசி” (ரௌத்திரம் பழகு, ப.40) என்றும் கூறுவதிலிருந்து நிலம் மலடாகி இருப்பதும். அதனை காக்க நெகிழி அரிசியை விற்பனை செய்யலாம் என்றும் கூறுவதைக் காணமுடிகிறது. நிலம் ஏற்கனவே மலடாகி விட்டதால்தான் அவற்றை மனைகளாக மாற்றி வருகிறார்கள் என்பதும் கூறப்படுகிறது.

இவ்வாறு நெகிழி அரிசியை கண்டு பிடித்து அதனை விற்பனை செய்து மக்களை அதை வாங்க வைப்பதற்கு நானாவித விளம்பர உத்திகளையும் பொய், புனைசுருட்டு ஆகியவற்றையும் வைக்கலாம் என்பது போன்று வியாபாராமாயணம் என்பது கூறப்படுகிறது. இந்த நாடகத்தில் சுற்றுச் சூழல் பற்றிய சிந்தனைகள் சிறிதளவு வெளிப்படுவதைக் காணலாம். மழையின்றி விதைக்கவும், விவசாயம் செய்யவும் இயலாத நிலையில் இருக்கும் மக்களுக்கு வரப்பிரசாதமாக நெகிழி அரிசி திகழும் என்று கூறினாலும் அதை யாரும் உணவாக்கிக் கொள்ள மாட்டார்கள் என்று கூறும் போது மாடுகள் பிளாஸ்டிக்கை தின்று பால் கறப்பதில்லையா என்று தர்க்கம் செய்யப்படுகிறது. அது போல மண்ணில் விவசாயம் செய்வதென்றால் உரம் போட வேண்டும். அவ்வாறு உரம் போட்டால் மண் தன் வளத்தை இழந்து விடும். அதனைக் காப்பாற்ற நெகிழி அரிசி பயன்படும் என்று கூறப்படுகிறது. நெகிழியை பயன்படுத்தினால் மண் சீர்கேடடையும் என்றும் கூறப்படுகிறது. இவ்வாறு இந்த நாடகத்தில் இயற்கைக்கு முரணான செயல்பாடுகளால் நேரும் கேடுகள் பற்றிக் கூறப்படுகிறது. சந்தைப்படுத்துதல் என்பது இன்று உலகளாவிய செயல்பாடாக மாறியிருக்கிறது. அது எவ்வித நலன்களையும் கருத்தில் கொள்ளாது என்பதை உணர்த்துவதாகவும் உள்ளது.

**முடிவுரை**

பண்பாட்டுச் செயல்பாடாக இருக்கின்ற பல செயல்பாடுகள் இன்று தொழில்நுட்பம் பெருகியதால் மாற்றம் பெற்றிருக்கின்றன. நிலம், காற்று, உணவு என அனைத்தும் மாசடைவதற்கு அடிப்படையாக இருப்பது வியாபாரம் என்னும் சந்தைப்படுத்துதல் ஆகும். மக்களிடம் பொருளை விற்பதற்காக செய்யும் தந்திரங்களில் ஒன்றாக விளம்பரம் இருக்கிறது என்பதை உணர்த்துவதாக வியாபாராமயாணம் என்னும் நாடகம் அமைகிறது, சந்தைக்குரிய மனிதர்களாக மாறியதால் சுற்றுச் சூழல் கேடு பற்றி யாதொரு கவலையும் கொள்வதில்லை என்பதாக முதலாளித்துவத்தின் கோர முகம் பற்றி எடுத்துரைக்கிறது. அரிசி உற்பத்தி குறையும் பொழுது உணவுப் பஞ்சம் ஏற்படுகிறது, அரிசி விலை உயர்கிறது. அதற்கு பரிகாரம் தேடுவது போல் வியாபாராமாயணம் என்னும் இந்த நாடகத்தில் நெகிழி அரிசி பற்றி விவாதிக்கப்படுகிறது, சந்தைப்படுத்துதல் என்னும் செயல்பாடு எதனுடைய நலத்தையும் பற்றி கவலை கொள்ளாது என்பதே இந்த நாடகத்தின் சாரமாக முன் வைக்கப்படுகிறது. மண், மனை, தொழிற்சாலை, விலை பேசப்படும், நிலம், உரம் ஆகியன பற்றிய சிறு சிறு கருத்துக்கள் சுற்றுச் சூழல் பற்றிய விழிப்புணர்வாக வெளிப்படுகிறது.

**துணைநூற்பட்டியல்**

1. மு.இராமசாமி, ரௌத்திரம் பழகு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், அம்பத்தூர், சென்னை, 2018
2. சு.சண்முகசுந்தரம், தமிழ் நாடகச் சரித்திரம் மரபிலிருந்து நவீனத்துக்கு, காவ்யா, சென்னை, 2008
3. கிறிஸ்டோபர் ஆன்றணி, இனயம் துறைமுகம், எதிர்வெளியீடு, பொள்ளாச்சி, 2017
4. வறீதையா கான்ஸ்தந்தின், கடற்கோள் காலம், எதிர்வெளியீடு, பொள்ளாச்சி, 2019.
5. சங்கீதா ஸ்ரீராம், பசுமைப்புரட்சியின் கதை, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில், 2010.